**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**IA NO.295/2022**

**In**

**O.S No.41/2021**

பூமிநாதன் **.........மனுதாரர்/உத்தேச 7-ம் பிரதிவாதி**

**//எதிர்//**

1. பச்சைமுத்து,

2. துரையரசன்,

3. ராஜம்மாள்,

4. சுப்பிரமணியன், **......1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

5. மஞ்சுளா,

6. தமிழக அரசுக்காக அதன் பிரதிநிதி
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
புதுக்கோட்டை,

7. சார் ஆட்சியர் அவர்கள்,
அறந்தாங்கி,

8. காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள்,
அறந்தாங்கி,

9. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அறந்தாங்கி,

10. பச்சமுத்து உடையார் **......5 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/உத்தேச 7-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.குழந்தைவேலு, பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பெ.செ.சிவராசு, பி.காம்.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 5-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.ராமநாதன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.G.கண்ணன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவு</u>

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம்:-</u>**

இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் சுனையக்காடு கிரமத்தின் பொது நலனிற்காக இந்த மனுவினை தாக்கல் செய்கிறார் என்றும், அசல் வழக்கு சொத்தும் அதன் சேகரமான அரசுக்கு சொந்தமான சொத்துக்களையும் வெளி நபர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து அகற்றி அவர்களது கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியினை தரம் உயர்த்தி மேல்நிலைப்பள்ளியாக மாற்றிட போதிய இடவசதிகள் செய்து தரக்கோரி வருவாய் வட்டாட்சியரிடமும் ஏனைய வருவாய் அலுவலர்களிடம் கிராம பொதுமக்கள் சார்பாக பலமுறை மனு கொடுத்துள்ளார் என்றும், மேற்படி மனு விசாரணைகள் இருந்தபொழுது வழக்கு 1-ம் பிரதிவாதிக்கு அரசு அலவலர்களால் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பள்ளி கூடத்திற்கு இடவசதி கோரி தாக்கட்ல செய்துள்ள மனுக்களை இத்துடன் ஆவணங்களாக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்துக்கள் தொடர்பான அனைத்து விவரங்களும் அவருக்கு முழுமையாக தெரியும் என்றும், மேற்படி வழக்கில் அவரை ஒரு தரப்பினராக சேர்க்கும்பட்சத்தில் வழக்கிற்கான முழு தகவல்களும் கிடைக்கக்கூடும் என்றும், மேலும் வழக்கினை மனுதாரர் தரப்பில் மேல்நடத்துவதற்கு தகுந்த கட்சி உள்ளது என்றும், எனவே வழக்கின் நலனை கருத்தில்கொண்டு மனுதாரரை ஒரு தரப்பினராக சேர்க்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்:-</u>**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக் கூடிய ஒன்றாக உள்ளது என்றும், மனுதாரர் மனு

ஆணையுறுதி ஆவணத்தின் குறிப்பிட்டுள்ளது போல் சுனையக்காடு கிராமத்தின் பொது நலனிற்காக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பதும் அசல் வழக்கு சொத்தும் அதன் அருகில் சேகரமான அரசுக்கு சொந்தமான சொத்துக்களையும் வெளி நபர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து அகற்றி மனுதாரர்களது கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியினை தரம் உயர்த்தி மேல்நிலைப்பள்ளியாக மாற்றிட போதிய இடவசதிகள் செய்து தரக்கோரி வருவாய் வட்டாட்சியரிடமும், ஏனைய வருவாய் அலுவலர்களிடம் கிராம பொதுமக்கள் சார்பாக பலமுறை மனு கொடுத்துள்ளார் என்பதும் மேற்படி மனு விசாரணைகள் இருந்த பொழுது வழக்கு 1-ம் பிரதிவாதிக்கு அரசு அலவலர்களால் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், வழக்கு சொத்துக்கள் தொடர்பான அனைத்து விவரங்களும் மனுதாரருக்கு முழுமையாக தெரியும் என்பதும், வழக்கில் முழுமையாக தகவலும் கிடைக்கக்கூடும் என்பதும் மனுவின் தோதிற்காக சொல்லப்பட்டுள்ள அப்பட்டமான பொய்யாகும் என்றும், வழக்கு நடவடிக்கையை நீட்டித்து பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. 5-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேப உரையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக் கூடிய ஒன்றாக உள்ளது என்றும், இதில்கண்ட மனுதாரர் அசல் வழக்கில் தன்னை தரப்பினராக சேர்த்துக்கொள்ள தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் உரிய தகவலை தெரிவிக்காமல் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், வேண்டுமென்றே அவரது தனிப்பட்ட காரணத்திற்காக, உள்நோக்கத்துடன் வழக்கில் தரப்பினராக சேர்த்துக்கொள்ள மனுதாரர்/உத்தேச பிரதிவாதிக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், வழக்கில் தரப்பினராக சேர்த்துக்கொள்வதால் மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு எவ்வித பலன்களும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட கோரி ஆட்சேப உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மேற்படி மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**7. பிரச்சனைக்கான தீர்வு:-**

மனுதாரர் சுனையக்காடு கிராமத்தில் பொதுநலனிற்காக இந்த மனுவை தாக்கல் செய்வதாகவும், கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திட போதிய இட வசதிகள் செய்து தர கோரி மனுதாரரால் வருவாய்த் துறையினருக்கு மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், 1-ம் பிரதிவாதிகளுக்கு அரசு அலுவலர்களால் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரை தரப்பினராக சேர்க்கும் பட்சத்தில் வழக்கு நடத்துவதற்கான முழு தகவல்களும் கிடைக்கும் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி மனுவை எதிர்த்து வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரரின் மனுவில் எந்தவித நல்லெண்ணமும் கிடையாது என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. 5-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எந்தவித முகாந்திரமும் கிடையாது என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

3) மனுதாரர் இந்த வழக்கிற்கு அத்தியாவசிய தரப்பினரா என்று ஆராய்ந்து பார்க்கும்போது தாவா வழக்கானது வாதிகளால் தாவா "அ" அட்டவணை சொத்தை பொறுத்து வாதிகளுக்கும், 6-ம் பிரதிவாதிக்கும் உரிமையுள்ளது என விளம்புகை பரிகாரம் கோரியும் வழக்கு "ஆ" அட்டவணை சொத்தைப் பொறுத்து 1-ம் பிரதிவாதி/5-ம் எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஒப்படைப்பை ரத்து செய்யக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்நிலையில் இந்த வழக்கில் மனுதாரர் தன்னை சுனையக்காடு கிராம பொதுமக்கள் நலனிற்காக செயல்படுவதாக கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் தாவா சொத்தில் பாத்தியம் இருப்பதாக மனுதாரரால் கட்சி செய்யப்படவில்லை. சுனையக்காடு பொதுமக்கள் சார்பாக இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்றும் மனுதாரரால் கட்சி செய்யப்படவில்லை. எனவே மனுதாரரின் கோரிக்கை அனுமதிக்கத்தக்கது இல்லையென இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே மனுதாரர் இவ்வாக்கிற்கு அத்தியாவசிய தரப்பினர் இல்லையென இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**
**மனுதாரர் தரப்புச் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**//உண்மை நகல்//**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு / செவ்வை உத்தரவு**
**I.A. No. 295/2022**
**O.S.No.41/2021**
**நாள் 20.12.2022**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**